# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./SC/7–11, 15 . 12 . 2008 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பினை, குறித்துரைத்து அறிவிக்கை செய்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2–இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் மாநிலத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்காக விளம்பப்பட்ட கட்டுப்பாட்டு வரையறையுடன், கடுமையான மின் பாற்றாக்குறையின்போது அந்த நிலைமைகளைச் சமாளிப்பதற்கும் மற்றும் அத்தகைய நெருக்கடிகளின் போது உரியவாறு மின் பகிர்மானம் செய்தலை உறுதி செய்வதற்கும் 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கு ஒருசில திருத்தங்கள் வெளியிடுவது தேவையெனக் கருதுவதாலும் :–

மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், (இதன்பின்பு இதில் முதன்மை விதித் தொகுப்பு என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைத்துள்ளது, அவையான :–

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :

(a) இந்த விதித் தொகுப்பு, 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இது, 2008ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**2. முதன்மை விதித் தொகுப்பின் 4ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :**

முதன்மை விதித் தொகுப்பின் 4ஆம் ஒழுங்குமுறைவிதியில், (2)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், (xiii)ஆம் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :

" (xiv) மின் வழங்கல் கட்டுப்பாட்டு வரையறையின் போது கூடுதல் தேவைக் கட்டணங்கள் மற்றும் கூடுதல் மின் கட்டணங்கள். "

**3. முதன்மை விதித் தொகுப்பின் 5ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :**

முதன்மை விதித் தொகுப்பின் 5ஆம் ஒழுங்குமுறைவிதியில், (12)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பின்பு, பின்வரும் உள்–ஒழுங்குமுறைவிதி சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :–

" (13) <u>மின்வழங்கல் கட்டுப்பாட்டு வரையறையின் போது கூடுதல் தேவைக்கட்டணம் மற்றும் கூடுதல் மின் கட்டணம்</u>

(i) உயர் அழுத்த மின் வழங்கலுக்கான அதிகபட்ச தேவைக்கட்டணங்கள், மின் வழங்கல் முனையத்தில் உள்ளபடியே பதிவு செய்யப்பட்ட தேவையின் அடிப்படையில் அல்லது கட்டுப்பாட்டு வரையறை நடவடிக்கைகளின் மூலம் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் தேவைப்பங்கின் 90 விழுக்காடு, இதில் எது அதிகமானதோ அதுவாக. இருத்தல் வேண்டும். அதிகபட்சம் பதிவு செய்யப்பட்ட தேவையானது நிர்ணயிக்கப்பட்ட பங்கிற்கு மிகையாக இருக்கும் நேர்வில், நிர்ணயிக்கப்பட்ட பங்கின் மிகைத் தேவையானது, அவ்வப்போது ஆணையத்தினால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

(ii) நிர்ணயிக்கப்பட்ட மின் பங்கிற்கு அதிகமாக நுகரப்படும் மின்சாரத்திற்குரிய கட்டணம், கட்டுப்பாட்டு வரையறை நடவடிக்கைகள் பொருந்தக்கூடிய அத்தகைய நுகர்வோரின் வகையினரைப் பொறுத்தவரை அவ்வப்போது

ஆணையத்தினால் குறித்துரைக்கப்படும் வீதங்களில் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

(iii) கட்டுப்பாடு நேரங்களின் போது, பற்றவைக்கும் இடங்களில் பயன்படுத்துவதற்காக தமிழ்நாடு மின்சார வாரிய மின் கட்டமைப்பிலிருந்து மின்சாரம் பெறும் மின்னிணைப்புகளுக்குரிய கட்டணம் அவ்வப்போது ஆணையத்தினால் குறித்துரைக்கப்படும் வீதங்களில் வசூலிக்கப்படுதல் வேண்டும்.''

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**ஜா. ஆனி மேரி சுவர்ணா**
உதவி செயலாளர்